**செ. கு. எண்: 173** **நாள் :10.09.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.9.2014

மதுரை மாவட்ட வனக்கோட்டம், திருமங்கலம் சமூக காடுகள் வனச்சரக அலுவலகத்தில் தோட்டக் காவலராகப் பணி புரிந்து வந்த பேரையூர் வட்டம், முருகனேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சைக்கனி என்பவர் 17.4.2014 அன்று பாம்பு கடித்ததில் மயக்கமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 18.4.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், மேல்செங்கம் மத்திய மாநில வன ஆராய்ச்சிப் பண்ணையில் வனக்காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சுதாகர் என்கிற சச்சிதானந்தம் என்பவர் 30.4.2014 அன்று மேல்வணக்கம்பாடி கிராமத்தில் வன ஆராய்ச்சிப் பண்ணையில் உள்ள கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், தென்தண்டலம் கிராமத்தில், செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் காவலராகப் பணி புரிந்து வந்த வடஆளபிறந்தான்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆதிகேசவன் என்பவர் 4.5.2014 அன்று பாம்பு கடித்ததில் மயக்கமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**